மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு பொதுச் சொத்து (அழித்தல், இழப்பு ஆகியவற்றைத் தடுத்தல்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவைச் சட்ட முன்வடிவு எண். 13/1982) நிறை வேற்றப்பெற வேண்டும்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப்பெற்றது.

(பிற்பகல் 1-00)

இ. மாகாண சிறுவழக்கு நீதி மன்றங்கள் (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவு, 1982.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் —

''1982 ஆம் ஆண்டு மாகாண சிறுவழக்கு நீதிமன்றங்கள் (தமிழ்நாடு திருத்த) சட்டமுன்வடிவு *சட்டமன்றப் பேரவைச் சட்ட முன்வடிவு எண். 14/1982) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ள பெற வேண்டும்.''

திரு. ப. வெங்கடசுப்ரமணியம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, மாகாண சிறுவழக்கு நீதி மன்றங்கள் (தமிழ்நாடு திருத்த) சட்டமுன்வடிவை நான் வரவேற்கிறேன். இந்தச் சிறு வழக்கு நீதி மன்றங்களிலே எல்லா உத்தரவுகளும், தீர்ப்பாணை களும் சில நேரங்களிலே மேல் முறையீடு செய்ய முடியாத ஒரு சூழ்நிலை இருக்கிறது. அதனால் பாதிக்கப்பட்டவர்கள் நேரடி யாக உயர்நீதிமன்றத்திற்குச் செல்ல வேண்டிய ஒரு கட்டாயம் ஏற்பட்டிருக்கிறது. அதுபோன்ற சங்கடங்களை நீக்குவதற்காக நம்முடைய மாண்புமிகு சட்ட அமைச்சரவர்கள் இந்தச் சட்டத் திருத்தத்தினைக் கொண்டு வந்திருக்கின்றார்கள். இந்தச்சட்டத் திருத்தத்தினால், பொதுமக்களுக்கு ஏற்படுகின்ற கால விரயம் பணச் செலவு ஆகியவற்றைக் குறைப்பதற்கு வாய்ப்பிருக்கிறது. அதன் மூலம் சிவில் நீதிமன்றங்களில் தேங்கியுள்ள கேஸ்களை உடனடியாக முடிப்பதற்கான வாய்ப்பிருக்கிறது.

ஒரேயொரு பாதுகாப்பை மட்டும் நம்முடைய சட்ட அமைச்சரவர்கள் செய்து தர வேண்டுமென்று விரும்பி வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன். இதனால் சாதாரண ஏழை பொதுமக்கள் பாதிக்கப்படக் கூடிய சூழ்நிலை சில நேரங்களில் ஏற்படுவதற் கான வாய்ப்பிருக்கிறது. அதற்கான சங்கடங்களை நீக்குவதற்கு நம்முடைய அமைச்சரவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டு மென்று கூறி இந்தச் சட்டத்திருத்தத்தினை வரவேற்று முடிக் கிறேன். நன்றி, வணக்கம்.

*1982 மார்ச் 4 ஆம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

1982 ஏப்ரல் 2]

திரு. பி. எம். தங்கவேல்ராஜ்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்ட அமைச்சரவர்களால் கொண்டுவரப்பட்டிருக்கின்ற இந்தச் சட்டத்தை இந்திரா காங்கிரஸ் கட்சியின் சார்பாக மனமார வரவேற்கிறோம். ஏழை எளியவர்களுக்கும், வறுமைக் கோர்ட்டிற்குக் கீழே உள்ளவர்களுக்கும் உதவுகின்ற இந்தச் சட்டம் வர வேண்டுமென்பது நீண்ட நாள் கோரிக்கையாக இருந்தது. சாதாரணமாக 500 ரூபாய்க்குக் கீழ் வாங்குபவர்கள் அங்கே ஜில்லா கோர்ட்டிலே அப்பீல் செய்ய முடியாமல், ஹைகோர்ட்டிலே ரிவிஷன் போடக் கூடிய ஒரு நிலை இருந்தது. மாண்புமிகு சட்ட அமைச்சரவர்கள் அந்த அளவிற்கு உதவி செய்ததற்காக மீண்டும் என்னுடைய நன்றியையும், பாராட்டுதலையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும் இந்தச் சட்டத்திலே இரண்டொரு குறைபாடுகள் இருக்கின்றன என்பதைத் தெரிவித்து அதையும் எடுத்துச் சொல்ல ஆசைப்படுகிறேன். ஸ்மால் காஸ் கோர்ட்டிலே எக்ஸ்பார்ட்டியாக டிகிரி ஆகிவிட்டால் மேலும் செட் அசைட் பெட்டிஷன், மேலும் அப்பீல் செய்ய வேண்டுமென்றால் அந்தத் தொகையை முழுவதும் செலவு முதற்கொண்டு நாம் டெப்பாசிட் செய்து கொண்டுதான் செட் அசைட் பெட்டிஷன் போடும் நிலைமையிருக்கிறது. அதற்கு வழிவகை செய்யக்கூடிய அளவிற்கு சட்டத்திலே திருத்தம் கொண்டு வர வேண்டும்.

மேலும், புதிதாகக் கொண்டு வந்த சட்டத்தைப் பொறுத்த வரையில், ஜில்லா முன்சீப் கோர்ட்டிற்கு 5,000 ரூபாய் முதல் 15,000 ரூபாய் வரையில் அந்த லிமிட்டேஷனைக் கொடுத்திருக்கிறோம். அந்த அளவிற்கு ஸ்மால் காஸ் கோர்ட்டிலும் உயர்த்துமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், இது போன்ற சட்டங்களை மற்றச் சட்டங்களுக்கும் கொண்டு வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

டெனன்ட்ஸ் ப்ரொடக்‌ஷன் ஆக்ட் 25/55 அல் அமென்டெட் என்ற சட்டத்திலே குறிப்பாகக் குத்தகைப் பாக்கி ஏற்பட்டால் அந்தத் தீர்ப்பை எதிர்த்து நாம் ஹைகோர்ட்டிலே ரிவிஷன் போடக்கூடிய நிலையில் இருக்கிறோம். ஆகவே, அதற்கும் இம்மாதிரி சட்டம் கொண்டு வரவேண்டும் என்று மாண்புமிகு சட்ட அமைச்சரவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், பேரன்ட்ஸ் ஆக்டிலே தீர்ப்புக்கு எதிராக அப்பீல் செய்ய வேண்டுமென்றால் ஆரம்பத்தில் டிஸ்டிரிக்ட் முன்சீப் கோர்ட்டில் அப்பீல் செய்யலாம். ஆனால் அண்மையில் செய்த மாறுதலினால் பேரன்ட்ஸ் கோர்ட்டிலே சொல்லப்படும் தீர்ப்புக்கு அப்பீல் சப்-கோர்ட்டிலே போடும் நிலைமை ஏற்பட்டிருக்கிறது. ஏழை எளிய குத்தகைதாரர்கள் நியாய வார கோர்ட்டிற்குப் போய்க் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கும் வழிவகை செய்கின்ற அளவிற்கு இதுபோன்ற சட்டத் திருத்தங்களைச் செய்து தருமாறு கேட்டுக்கொண்டு, இந்தச் சட்டத்தை எங்கள் கட்சியின் சார்பாக வரவேற்று அமர்கிறேன், வணக்கம்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, ஏற்கனவே மாண்புமிகு உறுப்பினர் வழக்கறிஞர் திரு. வெங்கடசுப்ரமணியம் அவர்களும், மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்கவேல்ராஜ் அவர்களும் சுட்டிக்காட்டியதை போல இந்தச் சட்ட முன்வடிவைப் பொறுத்தவரைக்கும் நீதி தேடி ஸ்மால் காசஸ் கோர்ட் என்ற அளவிலே இருக்கின்ற, கீழ் மட்டத்தில் இருக்கின்ற நீதி மன்றங்களுக்கு மாவட்டத்தின் உட்பகுதிகளிலிருந்து அந்த மக்கள் செல்லும்பொழுது அவர்களுக்கு அப்பீல் புரொவிஷன் இல்லாமல், செக்ஷன் 24 ஆஃப் தி பர்ட்டிகுலர் சட்டத்திலே உள்ள அப்பீல் புரொவிஷன் போக மீதி எல்லா வழக்குகளிலேயும் அவர்களுக்கு உயர்நீதிமன்றத்திற்கு ரிவிஷனல் பவர் மட்டுமே இருந்த காரணத்தால் மக்களுக்குச் சொல்லொணாத் துயரும், பணச் செலவும் ஏற்பட்டு வந்த நிலை மாற வேண்டுமென வழக்குரைஞர்களின் சார்பிலும், பொது மக்களின் சார்பிலும் வந்த அவர்களது வேண்டுகோளை அரசு ஆய்ந்துதான் இந்தத் திருத்தத்தைக் கொண்டு வந்திருக்கிறது.

இனிமேல் இதுகாறும் உயர்நீதிமன்றம் அதனுடைய அதிகாரத்தை உட்பட்டு ஸ்மால் காசஸ் கோர்ட்டிலே இருந்து ரிவிஷனிரி பவரைப் பயன்படுத்தி அதனுடைய அதிகாரத்திற்கு எடுத்த தீர்ப்பினை வழங்கிய வழக்குகளை எல்லாம் மாவட்ட நீதிபதி அவர்களே Either suo motu by himself or by an application made by an aggrieved party அதை விசாரித்து மாவட்ட அளவிலே வழக்குகளுக்குத் தீர்ப்பு அளிக்கின்ற வகையிலே வகை செய்யப்பட்டிருக்கின்ற இந்த சட்டம், மக்கள் உயர்நீதி மன்றம் நோக்கி வரவேண்டிய நிலை இல்லாமல் அவர்களுக்கு வசதியாக அமையும் என்ற காரணத்தால், இந்த நல்லதொரு சட்டத்தை அவை ஏற்க வேண்டும் என்று கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவை துணைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி—"1982 ஆம் ஆண்டு மாகாண சிறுவழக்கு நீதி மன்றங்கள் (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 14/1982) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெறவேண்டும்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற்றது.

பிரிவு 2, 3 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றது.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: தலைவர் அவர்களே, 1982 ஆம் ஆண்டு மாகாண சிறுவழக்கு நீதி மன்றங்கள் (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 14/82) நிறைவேற்றப்பெறவேண்டும்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப்பெற்றது.